வெளியீடு : 17-4-2017 Issued : 17-4-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (15-வது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (15TH ASSEMBLY)

**வெள்ளிக்கிழமை, ஜூன் 3, 2016 தொகுதி 1 எண் 2**

**Friday, the 3rd June 2016 Volume 1 No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 3–6–2016

உள்ளடக்கம்

*பக்கங்கள்*


| | |
|---|---|
| **1. பேரவைத் தலைவர் தேர்தல்** | 19-21 |
| **2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்** | 21-22 |
| **3. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும் நன்றியுரைகளும்—** | |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 22-25 |
| **திரு. மு.க. ஸ்டாலின்* | 26-29 |
| *திரு. கரி. இராமசாமி* | 30 |
| **திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்* | 30-32 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 32-36 |
| *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* | 37-41 |
| *மாண்புமிகு பேரவைத் தலைவர்* | 41-44 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, வைகாசி 21, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 ஜூன் 3, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்* **திரு. செ. செம்மலை** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:**

*"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
*உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."*

*கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** *பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178–வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.*

*சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4–ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:*

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [2016 ஜூன் 3

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | : | திரு. ப. தனபால் அவர்கள் |
| முன்மொழிந்தவர் | : | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) |
| வழிமொழிந்தவர் | : | மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் |

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவரது வேட்புத் தாள் மட்டுமே பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். இத்துடன் என் பணியை நிறைவு செய்கின்றேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில், இந்த அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களை மரபுப்படி அவரது இருக்கையில் அமரச் செய்தல் வேண்டும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் அழைத்துவந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் அழைத்துவந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஜூன் 3]

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தனித்தே நின்றார்! தம் சாதனைகளை முன்வைத்தே தன்னந்தனியாக உழைத்தார்! தர்மத்தைக் காத்தார்! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் உள்ளம் எல்லாம் நிலைத்தார்! தனக்கு நிகர் ஒருவரும் இல்லை என்பதை நடந்து முடிந்த சட்டமன்றத் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல்மூலம் தரணிக்கு மீண்டும் உரைத்தார்! மகத்தில் பிறந்த மகராசிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்வோடுகூடிய மக்கள் சக்தி வைகாசி திங்களில் தந்த வெற்றி! வரலாற்று வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை புரிந்து சரித்திரம் படைத்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வருக! வருக! என பணிந்து வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*15–வது சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, வருகை புரிந்துள்ள உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.*

## 2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8, உள்விதி 2–ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

| | | |
|---|---|---|
| *நியமனம் செய்யப் பெற்றவர்* | : | *திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்* |
| *முன்மொழிந்தவர்* | : | *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)* |
| *வழிமொழிந்தவர்* | : | *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்* |

[பேரவைத் தலைவர்] [2016 ஜுன் 3

*பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும் நன்றியுரைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரைகள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் உயிரிலும், உணர்விலும் இரண்டறக் கலந்து தமிழகத்தின் வளர்ச்சியே தன் வாழ்வின் இலட்சியம் எனக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தனக்கென வாழாது தமிழக மக்களின் நலனுக்கே தன் வாழ்வை அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தவ வாழ்க்கை வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டனுக்கும் தொண்டனாகிய என்னை நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சர் மற்றும் அவை முன்னவர் என்னும் உயரிய பொறுப்புகளை நல்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பெருமைக்குரிய இருக்கையில் அமர வைக்கும் பொன்னான வாய்ப்பை எனக்கு அளித்து, என் போன்ற எளிய தொண்டருக்கும் நல்வாய்ப்புகளை வழங்கி, அழகு பார்க்கும் அற்புதத் தலைவி! (மேசையைத் தட்டும் ஒலி) தீயோரை வீழ்த்த வந்த திராவிடத்து பேரொளி! (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி தொண்டர்களுக்கு விழி என விளங்கிடும் சுடரொளி! (மேசையைத் தட்டும் ஒலி) சதிகளை சம்ஹாரம் செய்கின்ற சக்தியின் திருவடிவம்! (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' எனும் சத்தியத்தில் வாழ்கின்ற சரித்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான வணக்கத்தினை முதற்கண் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

*என்னை வெற்றி பெறச் செய்து, இப்பேரவையில் பங்கேற்கின்ற வாய்ப்பினை அளித்த போடிநாயக்கனூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–10*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஒருமுறை ஆட்சி செய்த கட்சி தொடர்ந்து மீண்டும் ஆட்சிக்கு வந்ததில்லை என்று கூறப்பட்ட கூற்றைப் பொய்யாக்கி, 34 ஆண்டுகளுக்குப் பின்னர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தான சாதனை படைத்து, மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசிகளோடு, தாங்கள் சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்ற, மீண்டும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். நிறை செய்து மக்கள் நெஞ்சங்களில் நிறைந்து, முறை செய்து காப்பாற்றும் மன்னவராய், மக்கள் மனங்களில் கொலுவிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 2012 ஆம் ஆண்டில் தங்களை சட்டமன்றப் பேரவைத் தலைவராக்கி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் 50 ஆண்டுகால கனவினை நனவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு அம்மா அவர்கள், தங்களை சட்டமன்றப் பேரவைத் தலைவராக மீண்டும் தேர்வு செய்ததன்மூலம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களைப் பெருமையும், பெருமிதமும் கொள்ளச் செய்திருக்கிறார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புகளையும், பாரம்பரியப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட தனிச்சிறப்புமிக்க பேரவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றின் உருவமான பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் போன்ற பெரும் தலைவர்களால் சிறப்புகள் பல பெற்று, மெருகூட்டப்பட்ட பேரவை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் இந்தியத் திருநாட்டிற்கே ஒரு முன்னோடியாகவும், ஒரு முன்மாதிரியாகவும் விளங்குவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. இத்தகு பெருமைகள் வாய்ந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராக, மாண்புமிகு*

தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராதரவோடு (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில், கண்ணும்கருத்துமாய் கடமையாற்றிய பெருமைமிகு தலைவர்கள் அமர்ந்து அலங்கரித்த அரியாசனத்தில், தாங்கள் இன்று அமர்ந்துள்ளது மகிழ்ச்சியினை அளிக்கிறது. கடந்த சட்டமன்றப் பேரவையில், பேரவைத் தலைவராக சிறப்பாகப் பணியாற்றிய அரிய அனுபவத்தையும், ஆற்றலையும் தாங்கள் கொண்டிருப்பதால், இப்பேரவையிலும் தங்களது சீரிய செயல்பாடுகளால், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களையும், அரவணைத்துச் சென்று, தாங்கள் திறம்பட பணியாற்றி சாதனை படைப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. பேரவைத் தலைவர் என்ற இப்பணி, மலர்ப் பாதையின் மேல் நடக்கின்ற பணி அல்ல. முட்கள் நிறைந்த பாதையில் பயணிக்க வேண்டியதைப்போன்ற கடினமான பணி என்பதை பேரவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவோம். பூமி குளிர்வதற்காக பொழிகின்ற மழைபோல, காடு, கழனி செழிப்பதற்காகப் பாய்ந்தோடும் நதிபோல, மண் குடிசை வாசலுக்கும் மகிழ்ச்சி தர வீசுகின்ற தென்றல்போல, பாகுபாடின்றி ஒளி பாய்ச்சும் பால் நிலா வெளிச்சம்போல, தொட்டதைத் துலங்கவைத்து, கண் பட்டதைத் துலங்கவைக்கும் சாதனைகளின் சக்கரவர்த்தியாகத் திகழும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அளப்பரிய ஆதரவு தங்களுக்கு இருப்பதால், இப்பணியினைத் தாங்கள் மிக நேர்த்தியாக மேற்கொள்வீர்கள் என்பதில் எங்கள் அனைவருக்கும் ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அன்றாட பேரவைப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும்வண்ணம் அன்பு சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் அமோக ஆதரவோடு மீண்டும் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த சட்டமன்றப் பேரவையில், பேரவைத் துணைத் தலைவராக

*அரும்பணியாற்றி, இப்பேரவையின் பெருமையை நிலைநிறுத்தி, கண்ணியமும் கட்டுப்பாடும் மேலோங்க சட்டமன்றப் பேரவையின் அலுவல்களைச் செம்மையான முறையில் நடத்தியவர் என்பதை நினைவுகூர்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் இப்பேரவையில் ஜனநாயகப் பணிகளைத் திறம்பட ஆற்றிட அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும், மன வேறுபாடுகளுக்கு இடம் தராமல், ஜனநாயக மாண்புகளுக்கு மதிப்பளித்து, சட்டமன்றப் பேரவையின் விதிகளையும், மரபுகளையும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், பேரவைப் பணிகளுக்குத் தங்களது முழு ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டுமென்றும் எனது வேண்டுகோளை விடுக்கின்றேன்.*

*முற்பகல் 10–15*

*மக்களால் நான், மக்களுக்காகவே நான்— (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்தியுள்ள அளப்பரிய சாதனைகளால் தமிழ்நாட்டினுடைய சிறப்பு உலக அளவில் வெளிப்பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) பலரும் பாராட்டக்கூடிய மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே தமிழ்நாடு சட்டமன்றமும் பிற மாநிலச் சட்டமன்றங்களுக்கெல்லாம் முன்னோடி சட்டமன்றமாக விளங்குவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயக மாண்புகளை மேலோங்கச் செய்யும் முதன்மைச் சட்டமன்றம் என்ற பெருமையினைப் பெறும்வண்ணம் இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் செயலாற்றிட வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு, ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் இருவருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளோடு (மேசையைத் தட்டும் ஒலி) எனது பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கக்கூடிய தங்களை, பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மிகப் பெரிய பொறுப்பிலே அமர்ந்திருக்கக்கூடிய தங்களுக்கு நான் சார்ந்திருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மனப்பூர்வமான வாழ்த்துகளை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*இந்திய நாட்டினுடைய வரலாற்றுப் பெருமைமிக்க சட்டமன்றங்களில் நம்முடைய தமிழகச் சட்டமன்றம் ஒரு மிகப் பெரிய, சிறப்புக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் நிச்சயம் அது மிகையாகாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப் பேரவை என்ற முறையில் ஏறத்தாழ 5 ஆண்டுகளில் நமது மாநிலச் சட்டமன்றப் பேரவை நூற்றாண்டைக் காணவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*சென்னை மாகாணத்தில் திராவிட இயக்கத்தின் தலைமையிலான ஆட்சி 1920 ஆம் ஆண்டு முதல் முறையாக அமைந்தது. அன்று தொடங்கி இந்தியாவுக்கே முன்னோடியான பல்வேறு முக்கியமான சட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிற ஒரு மிகப் பெரிய பொறுப்பைத் தொடர்ந்து இந்த மாமன்றம் வழங்கி வருகிறது.*

*15–வது சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவராக தாங்கள் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த நேரத்தில், புகழ்பெற்ற பேரவைத் தலைவர்களைப் பெற்ற பாக்கியம் இந்த அவைக்கு உண்டு என்பதை நான் நினைவுகூர விரும்புகிறேன். சுதந்திரம் அடைவதற்கு முன்பே பேரவைத் தலைவராக இருந்த புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் காந்தியடிகளைப் பின்பற்றி மேலாடை இல்லாமல், இடையிலே வேட்டியும், மேலே துண்டும் அணிந்து எளிய வகையிலே காட்சி தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*1952 ஆம் ஆண்டு, முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு பேரவைத் தலைவராக திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடத்தி, ஒரு மிகப் பெரிய அஸ்திவாரத்தை இந்தச் சட்டமன்றத்திற்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார். சட்டமன்றத்தின் மரபுகளை, விதிகளை*

வகுத்துக் கொடுக்கக்கூடிய “May’s Parliamentary Practice” என்ற புத்தகத்தை நன்கு கற்று அறிந்த அறிஞர் என்ற அந்தப் பெயரையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்குப் பிறகு நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாகச் சட்டமன்றத்திற்குள் நுழைந்த நேரத்தில் அன்று பேரவைத் தலைவராக இருந்து பணியாற்றிய டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் இனிமையான அணுகுமுறை, அன்பான அரவணைப்பு, அற்புதமான அறிவாற்றல் அனைத்தையும் இந்தப் பேரவைக்கும், பேரவை உறுப்பினர்களுக்கும் தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முற்பகல் 10–20

அந்தவகையிலே அடுத்தடுத்து பல திறமைவாய்ந்த பேரவைத் தலைவர்களை நாம் கண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், புலவர் திரு. கோவிந்தன் அவர்கள், திரு. முனு ஆதி அவர்கள், திரு. க. ராஜாராம் அவர்கள், திரு. சி.ப. ஆதித்தனார் அவர்கள், திரு. செல்லப்பாண்டியன் அவர்கள், திரு. காளிமுத்து அவர்கள், திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள், பண்பாளர் திரு. பி.டி.ஆர். அவர்கள் போன்றவர்களை நாம் என்றைக்கும் மறந்துவிடமுடியாது.

மக்களாட்சி தத்துவத்திலே, ஜனநாயகத்தின் இதயம் சட்டமன்றமாக அமைந்திருக்கின்றது. ஜனநாயகத்தின் முக்கியமான மூன்று தூண்களில் ஒன்றாக இந்தச் சட்டமன்றம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த இதயம் சீராகத் துடித்தால்தான் ஜனநாயகத்தில் சட்டமன்ற மரபுகளும், விதிகளும் காப்பாற்றப்படும் என்பதை நாம் நன்கு அறிவோம். என்னைவிட இந்த அவையிலே அமர்ந்திருக்கக்கூடிய மூத்த உறுப்பினர்கள் இதை இன்னும் தெளிவாக உணர்ந்திருப்பார்கள். பெரும்பான்மையுள்ள கட்சியின் விருப்பப்படி, பேரவைத் தலைவரின் தேர்வு நடைபெறுவது வழக்கம் என்று சொன்னாலும், தேர்வு செய்யப்பட்டதற்குப் பிறகு அவர் அனைத்து கட்சிகளுக்கும் பொதுவானவராக இருந்திட வேண்டும். கட்சி சார்பற்றவர் என்பதுதான் இனிவரும் 5 வருடங்களில் கிடைக்கக்கூடிய பெருமையாக அமைந்திடமுடியும். இதைச் சட்டமன்றம் பேணிப் பாதுகாத்து வந்திட வேண்டும்.

*இந்த எதிர்ப்பார்ப்பு, நம்பிக்கை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய, எஜமான்களாக இருக்கக்கூடிய பொதுமக்களிடமும் அந்த நம்பிக்கைதான் இருந்துகொண்டிருக்கிறது.*

*இதுவரை இல்லாத அளவிற்கு 89 சட்டமன்ற உறுப்பினர்களுடன் பலம்பொருந்திய எதிர்க்கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) 15–வது சட்டமன்றத்திலே அமர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அவையில் எதிர்க் கட்சியினரே தவிர, அது நிச்சயமாக எதிரிக்கட்சியாக இருக்காது என்பதை நான் முன்கூட்டியே எடுத்துவைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய நலனைக் காப்பாற்றுவதிலே இந்த அவையினுடைய புகழை, பெருமையைக் காப்பதிலே, ஆளும்கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டுக்கும் இரட்டைப் பொறுப்பு,* Dual Responsibility *என்று சொல்வார்களே, அதைத்தான் நான் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன். அது இங்கே அமர்ந்திருக்கக்கூடிய ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும், அதை ஏற்றுக்கொள்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. ஏனென்றால், ஒரு சிறந்த எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆளும்கட்சிக்குத்தான் நிச்சயமாக இருந்திட வேண்டும்.*

*இந்த நேரத்தில், நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் 1957–லே, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூறிய வழிகாட்டுதல்தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது. அன்றையதினம் அண்ணா சொன்னது; சட்டமன்றத்திற்குச் செல்லும் நம்முடைய தோழர்களுக்கு 3 வகையான பொறுப்புகள் அமைந்திருக்கின்றன. (1) சட்டமன்றத்தில் நடைபெறக்கூடிய விவாதங்களை நாகரிகமானதாக ஆக்குவது; (2) சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி நலனுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களை ஆற்றுவது; (3) தி.மு.க.வின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து வழுவாமல் இருப்பது; ஆகிய இந்த மூன்று கோட்பாடுகளை நிச்சயமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் கடைப்பிடிக்கும், அதைச் செயல்படுத்திக் காட்டுவோம் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாநில உரிமை சார்ந்த பிரச்சினைகளில் ஆளும்கட்சியோடு இணைந்து போராடும் என்ற அந்த உத்தரவாதத்தையும் நான் இந்த நேரத்திலே அளிக்க விரும்புகிறேன். இதே அவையிலே பேரவைத் தலைவராக ஒருமுறை திரு. முனு ஆதி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, திரு. முனு ஆதி அவர்களைப் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைத்து, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள் "பேரவைத் தலைவர்கள் வயலினைப் போன்று இருக்க வேண்டும். வயலின் கம்பியை இருபுறம் இழுத்தாலும் அது ஒலி எழுப்பும். அதுபோல, பேரவைத் தலைவர் அவர்கள் இரு தரப்புக்கும் பொதுவாக பணியாற்ற வேண்டும்" என்று அன்றைக்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.*

*இந்த அவையில் எங்களையெல்லாம் வழி நடத்த வேண்டியவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். ஆகவே, இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீதும், அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடியவர்மீதும் நாங்கள் அளவு கடந்த நம்பிக்கையை வைத்திருக்கிறோம். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இன்றையதினம் 63–வது பிறந்த நாளைக் காணக்கூடிய எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் சார்பிலும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தங்களுக்குத் தெரிவித்து, அமைகிறேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) திரு. ஸ்டாலின் என்ன? சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை முடிக்கின்ற நேரத்திலே தலைவர் கலைஞர் அவர்களுக்கு 63–வது பிறந்த நாள் என்று குறிப்பிட்டுவிட்டேன். 93–வது பிறந்த நாளைக் காணக்கூடிய தலைவர் கலைஞர் என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய தலைவராக தாங்களும், துணைத் தலைவராக மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். பேரவைத் தலைவர் என்ற மிகப் பெரிய பொறுப்பைத் தாங்கள் ஏற்று இருக்கின்றீர்கள். நீதியை நிலைநாட்ட வேண்டிய இடத்திலே நீங்கள் அமர்ந்து இருக்கின்றீர்கள். நீதி தேவதைக்கு முன்பாக ஒரு தராசைத் தொங்கவிட்டிருக்கின்றார்கள். அந்தத் தராசு எந்தப் பக்கமும் சாயாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவரைப் பொறுத்தமட்டில் மிகப் பெரிய பாரம்பரியம் இந்தத் தலைவர் பதவிக்கு இருக்கிறது. தாங்கள் அமர்ந்து இருக்கக்கூடிய அந்த இருக்கைக்குக்கூட ஒரு பாரம்பரியத் தொடர்பு இருக்கிறது. அந்த இருக்கை நமக்கு எவ்வாறு கிடைத்தது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இவ்வளவு பெரிய பொறுப்பில் இருக்கக்கூடிய நீங்கள் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று எண்ணிப் பார்க்காமல் இருவரையும் ஒருவராக எண்ணி செயல்படுவீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். நீங்கள் நீதியை நிலைநாட்ட வேண்டும், மரபுகளைப் பின்பற்ற வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில், தொடர்ந்து இந்த அரசுக்கும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நல்லது நடக்கும்போது நாங்கள் நிச்சயமாக உறுதுணையாக இருப்போம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களது பாராட்டை உங்களுக்குத் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் எங்களின் இதயம் நிறைந்த நன்றியினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம். ஜனநாயக மரபுகள் தழைக்க ஆளும்கட்சி, எதிர்க்கட்சிகளுக்கு இணக்கம் ஏற்படும் நல்ல மரபைத் துவங்கி, வழிகாட்டியிருக்கும், எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்றிருக்கும், எங்களது*

தளபதியார் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*முற்பகல் 10–30*

இந்த மாபெரும் அவையிலே மாபெரும் தலைவர்கள் இருந்து தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக வேண்டி பல்வேறு அளப்பரிய பணிகளை ஆற்றியிருக்கின்றார்கள். அந்தத் தலைவர்களுடைய நெறியிலே நாமும் பயணித்து, ஒட்டுமொத்தத் தமிழகமும் தழைத்தோங்குவதற்கு நாம் எல்லாம் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்ற வேண்டுகோளோடு இந்த சிறப்புக்குரிய அவையில் நான் சார்ந்து இருக்கக்கூடிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கினுடைய மிகப் பெரிய தலைவராக இருந்த காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப், அப்துல் சமது சாகிப், அப்துல் லத்தீப் சாகிப் போன்றவர்களெல்லாம் பணியாற்றிய இந்த அவையில் இந்த எளியேனும் அமர்ந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பை நல்கிய என்னுடைய கடையநல்லூர் தொகுதியினுடைய மக்களுக்கும், நான் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்காக வேண்டி எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய கூட்டணியினுடைய தலைவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் பேராசிரியர் காதர் மைதீன் அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இப்பேரவையில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் ஜனநாயக மரபுகள் தழைத்திடவும் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலமாக ஒட்டுமொத்தத் தமிழகமும் முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கும், தமிழகத்திலே ஒட்டுமொத்தமாக அனைத்து மக்களும், குறிப்பாக, சிறுபான்மை சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் சம உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு இந்த அரசு அனைத்து வகையிலும் எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். எங்களுக்கு எல்லா வகையிலும் அனுசரணையாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்த அவையிலே காட்சியாக இருக்கக்கூடிய எங்களுடைய தலைவர் காயிதே மில்லத் அவர்களுடைய படத்திற்கு கீழே கண்ணியமான ஒரு வாக்கியம் இருக்கின்றது. “கண்ணிய அரசியலைக் கட்டிக் காப்போம்” என்ற அந்த வாசகத்தின் அடிப்படையில் எல்லா நிலைகளிலும் இந்த ஆட்சியும், ஆட்சியிலே பங்கேற்று இருக்கக்கூடிய அமைச்சர்

பெருமக்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய தளபதியார் அவர்களும் எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளுக்கும் ஒருங்கிணைந்த முறையிலே நாங்கள் செயலாற்றுவோம் என்ற எங்களுடைய கோரிக்கையைத் தெரிவித்து, எல்லா நிலைகளிலும் நல்லாட்சி வளர்வதற்கு நாங்களெல்லாம் துணை நிற்போம், எல்லா நிலைகளிலும் தமிழகம் உறுதுணையாக முதன்மை மாநிலமாகத் திகழ்வதற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் சார்பாக மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கின்றது என்பதற்கு அடையாளமாக விளங்குவது சட்டமன்றம்தான். தமிழகச் சட்டமன்றம், ஜனநாயகம் தழைத்தோங்கும் சட்டமன்றமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தின் சபாநாயகராக தாங்கள் ஒருமனதாக மட்டுமல்லாமல், தொடர்ச்சியாக இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சபாநாயகர் தாங்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பெருமை தங்களை வந்தடைந்திருப்பது மற்றுமொரு மகிழ்ச்சி. எனவே, எனக்கு இதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, 1984 ஆம் ஆண்டிற்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமை எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

“ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்பவை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமேயானால் அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்” என்றார் பேரறிஞர் அண்ணா

அவர்கள். அண்ணாவின் பெயரை கட்சியிலேயும், அண்ணாவின் உருவத்தைக் கொடியிலேயும் தாங்கிக் கொண்டுள்ள கட்சி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு ஏற்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக் காக்க நாங்கள் முழு ஒத்துழைப்பு தருவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதே சமயத்தில் எதிர்க் கட்சிகளும் தங்களுடைய கடமையையும், பொறுப்பினையும் உணர்ந்து, மக்களுக்குப் பயன்படக்கூடிய ஆக்கப்பூர்வமான கருத்துகளைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தோமானால், எந்த அளவுக்கு இந்த மன்றம் புகழோடும், பேரோடும் நிலை பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, திரு. என். கோபால மேனன், டாக்டர் யு. கிருஷ்ணாராவ், திரு. எஸ். செல்லபாண்டியன், டாக்டர் கா. காளிமுத்து போன்றோர் இந்த மன்றத்தின் புகழ் ஓங்கும் அளவிற்கு மகத்தான பணியினை ஆற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

Central Legislative Assembly சபாநாயகராக திரு. விட்டல்பாய் பட்டேல் (Mr. Vithalbhai Patel) அவர்கள் பொறுப்பேற்றபோது, அன்றைய காங்கிரஸ் கட்சித் தலைவரைப் பார்த்து, “நான் இன்று முதல், காங்கிரஸ் கட்சியை சார்ந்தவன் இல்லை. நான் எக்கட்சியையும் சாராதவன். சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து துலாக்கோல் போல் சபையை நடத்தக் கடமைப்பட்டவன்” என்று கூறினாராம். தாங்களோ கட்சிப் பணியை விட்டு பல ஆண்டு காலம் ஆகிறது. தாங்கள் பேரவைத் தலைவராக இருந்த ஆண்டுகளின் அவை நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தாலே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எந்த அளவுக்குப் பேச வாய்ப்பு அளித்தீர்கள்; எந்த அளவுக்குக் கனிவோடும், கண்டிப்போடும் நடந்து கொண்டீர்கள்; எந்த அளவிற்கு அவையின் மாண்பினையும், உறுப்பினர்களின் பாதுகாப்பினையும் நிலைநாட்டினீர்கள் என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். மொத்தத்தில், “நடுவு நிலைமை” என்பதைத் தாரக மந்திரமாகக்

கொண்டு தாங்கள் கடந்த காலங்களில் செயல்பட்டு வந்தீர்கள். இனி வருங்காலங்களிலும் தங்கள் பணி தராசு முள் போல எந்தப் பக்கமும் சாயாமல் நடுநிலையோடு இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

திரு. விட்டல்பாய் பட்டேலின் அணுகுமுறையை கையாண்டவர்தான் இந்தச் சபையின் தலைவராகப் பணிபுரிந்த திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். காங்கிரஸ் கட்சியிலே தீவிரப் பற்று இருந்தாலும், பேரவைத் தலைவரான பிறகு எவ்வாறு நடுவு நிலையோடு செயல்பட முடியும் என்பதற்குச் சான்றாக விளங்கியவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். விதிமுறைகளையும், மரபுகளையும் முழுமையாகக் கடைப்பிடித்து, கண்டிப்புடன் இந்த அவையை நடத்திக் காட்டியவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள்.

இவரைப் போலவே, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும் இந்தப் பேரவைக்கு பெருமையைச் சேர்த்தவர். விவாதத்திலே சூடு கிளம்புகின்ற நேரத்தில், நகைச்சுவையாக ஏதாவது பேசி சூட்டைத் தணிக்கும் வல்லமை படைத்தவர் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் என்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஒரு எளிமையான அணுகுமுறையை கடைப்பிடித்தவர் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள்.

ஒருவர் சிறந்த சபாநாயகராக விளங்க வேண்டுமென்றால், திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களின் கண்டிப்பும், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களுடைய எளிமையான அணுகுமுறையும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும், ஒருங்கே பெற்றவர் தாங்கள் என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

கயிற்றின் மேல் நடக்கும் வித்தைக்காரர் ஒருவரின் வெற்றிக்கு என்ன காரணம் என்று கேட்கப்பட்டது. ஒருவர் “கவனம்” என்றார். மற்றொருவர் “விழிப்புணர்வு” என்றார். இன்னொருவர் “பயிற்சி” என்றார். ஆனால், பயிற்சியாளரோ, “இவை அனைத்தையும்விட முக்கியமானது ‘நடுவு நிலைமை’ என்றார். ஏனென்றால், இடது பக்கமோ, வலது பக்கமோ எந்தப் பக்கம் சாய்ந்தாலும் கயிற்றில் நடப்பவர் விழுந்து விடுவார்” என்றாராம். இந்த அளவுக்குக் கடுமையான பணிதான் சபாநாயகர் பணி ஆகும்.

2016 ஜூன் 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பின்தங்கிய கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்து முதுகலைப் பட்டம் படித்த தாங்கள், இந்த மாமன்றத்திற்கு ஆறாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள். அன்பிற்கும், எளிமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் பாங்கினை தாங்கள் இயற்கையாகவே பெற்று இருக்கிறீர்கள். அமைச்சராகவும், துணை சபாநாயகராகவும், சபாநாயகராகவும் திறம்பட பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு ஏற்கெனவே உண்டு. இந்தப் பணி உங்களுக்கு புதிய பணி அல்ல. எனவே, இந்தக் கடினமான பணியை நீங்கள் செவ்வனே ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்தப் பதவி உங்களை வந்தடைந்ததற்கு காரணம், உங்களுடைய திறமை, உங்களுடைய ஆற்றல், உங்களுடைய அனுபவம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே நடக்கவிருக்கும் விவாதங்களில் உணர்ச்சிவசப்பட்டு பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருப்பார்கள். நகைச்சுவையுடன் பேசக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருப்பார்கள். ஆக்ரோஷத்துடன் பேசக்கூடியவர்களும் இருப்பார்கள். காரசாரமான விவாதங்கள் நடைபெறும். அப்போது எல்லோரும் உணர்ச்சிவசப்பட்டாலும், கட்சி மாச்சரியங்களைப் புறந்தள்ளி, அனைவரையும் ஒருசேர நினைத்து நடுவராக இருந்து தீர்ப்பு அளிக்கும் பணியினை, தாங்கள் நடுநிலையோடு ஆற்றுவீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

முற்பகல் 10–40

தங்களுக்கு பக்கபலமாக, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் அன்புச் சகோதரர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களும் அவையின் விதிமுறைகளையும், மரபுகளையும் நன்கு அறிந்தவர். முதுகலைப் பட்டமும், முனைவர் பட்டமும் பெற்ற அன்புச் சகோதரர் திரு. ஜெயராமன் அவர்கள் நான்காவது முறையாக இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார். சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றிய அனுபவம் திரு. ஜெயராமன் அவர்களுக்கு உண்டு. குறிப்பாக, எதிர்க் கட்சி வரிசையிலே அமர்ந்து, மக்களுக்காக வாதிட்ட பெருமைக்குரியவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள்.

ஐம்புலன்களிலே "நா" என்பது சுவையறிந்து உண்பதற்கான உறுப்பு மட்டுமல்ல. பேச்சிலும் சுவையைக் கூட்டி பிறருக்கு இன்பத்தைத் தரக்கூடியது. இந்த நாவன்மைக்கும், கணீர் குரலுக்கும் சொந்தக்காரர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள்.

எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எதிர்க் கட்சிகளின் எண்ணிக்கைக்கேற்ப எங்கள் நடவடிக்கைகளை வகுத்துக் கொள்பவர்கள் நாங்கள் அல்ல. எதிர்க் கட்சிகளின் எண்ணங்களைப் பார்த்து, மக்களின் எண்ணங்களை எவ்வாறு அவர்கள் பிரதிபலிக்கின்றனர் என்று பார்த்து, அவர்களின் ஆக்கப்பூர்வமான கருத்துகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய வகையில் விளங்குவோம் என்ற உத்தரவாதத்தை என்னால் அளிக்க முடியும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப நாங்கள் செயல்படுவோம்.

இந்தச் சட்டமன்றத்தில் பல கட்சிகள் இடம்பெறாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஆட்சிப் பொறுப்பில் உள்ள கட்சிக்கும், இங்கே உள்ள எதிர்க் கட்சிகளுக்கும், மக்கள் நலன் காக்கும் வகையில் செயல்பட வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு உள்ளது.

அனைத்து தரப்பினரின் பாராட்டுதல்களுக்கும் உரியவர்களாக இந்த மாமன்றத்தின் தலைவராக வீற்றிருக்கிற நம்முடைய பேரவைத் தலைவர் அன்புச் சகோதரர் திரு. ப. தனபால் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவராக அமர்ந்திருக்கிற திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, என்னை ஆறாவது முறையாக முதலமைச்சராக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) என்னை மீண்டும் இரண்டாவது முறையாகத் தொடர்ந்து முதலமைச்சராக்கிய (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கும், என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு, தேர்ந்தெடுத்து அனுப்பிய ஆர்.கே. நகர் தொகுதி மக்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்புரை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

2016 ஜூன் 3]

**மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *அனைவரும் வியக்கும் அயராத உழைப்பாலும், எல்லையில்லா வீரத்தாலும், மாற்றார் போற்றும் மதிநுட்பத்தாலும், வல்லரசு நாடுகளும் வரவேற்கின்ற வற்றாத வல்லமையினாலும், அவனி போற்றுகின்ற அள்ளக்குறையா ஆற்றலாலும், ஈடிணையில்லா தியாகத்தாலும், தனியொரு தலைவியாகப் போராடி வெற்றிபெற்று, தியாக சரித்திரம் படைத்திட்ட (மேசையைத் தட்டும் ஒலி) தமக்கென வாழா தாய்மைத் தவமே, தொண்டுக்கே உழைக்கும் தூய்மைத் துறவே, விண்ணும், மண்ணும் வியக்கும் வீரமே, அன்னை தெரசா முதல் அமர்த்தியா சென் வரை போற்றிப் புகழ்கின்ற பொது வாழ்வுப் புனிதமே, (மேசையைத் தட்டும் ஒலி) ஏணிகளின் தயவின்றி வான்தொட்ட வல்லமையே, ஏழையரை வாழ்விக்க இறை தந்த வழித் துணையே, கன்னித் தமிழ் பூமி காக்க அவதரித்த அன்னைத் திருமகளே, ஏழரை கோடி தமிழர் உரிமைக்கு எஃகுக் கவசமே, எட்டாம் அதிசயமே, கூராயுதம் ஏந்தி ஓராயிரம் எதிரிகள் ஓரணி திரண்டாலும், இரு விரலை ஈட்டியாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஈகையை வாகையாக்கி, புரட்டர்களைப் புறமுதுகு காட்டச் செய்யும் புறநானூற்றின் புது வடிவே, அயராது தன்னந்தனியராய் உழைத்து, 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்ட கட்சியின் கையிலேயே ஆட்சிச் சக்கரம் (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் சரித்திர சாதனையைப் படைத்துள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களின் மலர்ப்பாதம் வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மைத் தொண்டனாகிய என்னை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகப் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10—45*

*இந்த அவையின் மாண்பையும், மரபையும், பெருமையையும் கட்டிக் காக்கின்ற வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கற்றுக்கொடுத்த பாதையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டிருக்கின்ற ஜனநாயகக் கோட்பாடுகளை*

[முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்] [2016 ஜூன் 3 என்றைக்கும் மீறாமல், என்னுடைய செயல்பாடுகளை அமைத்து, அவையின் பெருமைக்கு சற்றும் களங்கம் ஏற்படாத வகையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய செயல்பாடுகளுக்கு துணை நின்று, பொறுப்புணர்வோடும் கடமையுணர்வோடும் பணியாற்றுவேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றில் இடம் பிடிக்கும் தலைவர்கள் வாழும் நாட்டில் வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் அற்புதத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் என் நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவுடன் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொடி பிடிக்கும் கடைக்கோடி தொண்டனையும் கோட்டையில் அமர வைத்து அழகு பார்க்கும் அன்புத் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் தென்னை நகரமாம் பொள்ளாச்சிக்கும், தன்னை யாசிக்க வந்த புலவனுக்கு தன்னிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்றபோதும், தன் தம்பி அமணனுக்குத் தன் தலையையே கொடுத்து, 1,000 பொற்காசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சொன்ன கடை ஏழு வள்ளல்களில் ஒருவனான வள்ளல் குமணன் வாழ்ந்த உடுமலைப்பேட்டைக்கும் இடையில் திப்பம்பட்டி என்ற குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த மிக சாதாரண தொண்டனான என்னை ஐந்து முறை கழகத்தின் மாவட்டச் செயலாளராகவும், தொடர்ந்து பத்து ஆண்டுகள் கழகத்தின் தேர்தல் பிரிவுச் செயலாளராகவும், அமைச்சராகவும், இரண்டு முறை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றும் நல் வாய்ப்புத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே வாழ்நாள் முழுவதும் நானும், என் குடும்பமும் தங்களுக்கு நன்றி சொல்வோம்.

வெண்தாடி வேந்தர் பெரியார் அவர்களை ‘தந்தை பெரியார்’ என்று குறிப்பிடுவோம். காஞ்சி தந்த கருவூலம், தென்னாட்டு பெர்னாட்ஷா இந்நாட்டு இங்கர்சால் பேரறிஞர் அண்ணா அவர்களை ‘அண்ணா’ என்று அன்புடன் குறிப்பிடுவோம். ஏழைகளின் ஏந்தல், கடை ஏழு வள்ளல்களுக்குப் பிறகு வாழ்ந்து மறைந்து, மக்கள் மனதில் என்றும் வாழும் வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை ‘வாத்தியார்’ என்று அனைவரும் அன்போடு அழைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், உலகம் முழுவதும் வாழும் ஒப்பற்ற தமிழர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாய் சொல்லும் மூன்று எழுத்து மந்திரச் சொல் "அம்மா" "அம்மா" "அம்மா". (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் ஒருவருக்கு மட்டும்தான் என்னைப்போன்ற முக விலாசம் இல்லாத எளியவனையும் நான்கு முறை தொடர்ந்து வெற்றி பெற வைத்து, இந்த அவையில் அமர வைத்து, சட்டமன்ற உறுப்பினராக்கும் பாங்கும் திறமையும் உண்டு. மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் ஒருவருக்குத்தான் இந்த அவையில் என்னைப்போன்ற எளியவனையும் நான்கு முறை தொடர்ந்து, ஒருமுறை உடுமலைப்பேட்டையிலும், மூன்று முறை பொள்ளாச்சியிலும் வெற்றி பெற வைத்து, அமர வைத்து, அழகு பார்க்கும் பாங்கும் திறமையும் உண்டு.

சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களை இந்தியாவின் இரும்பு மனிதர் என்று சொல்வார்கள். அன்னை இந்திரா அவர்களை இந்தியாவின் இரும்பு மங்கை என்று சொல்வார்கள். ஆனால், இன்று வாழும் Iron Lady of India is our Amma. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். வாழும் இரும்பு மங்கை பாரதத் தாய், நம் அம்மா. ஏன் இதை நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், தனி ஒருவராக, கூட்டணிகளைத் தேடாமல் 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகளுக்குப் பிறகு 134 தொகுதிகளில் வெற்றி பெறச் செய்த வரலாற்று நாயகி, (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரம் போற்றும் தங்கத் தலைவி அம்மாவின் சாதனை மணிமகுடத்தில் பதிக்கப்பட்ட வைரக்கல்தான் அம்மாவின் இந்த மாபெரும் வரலாற்று வெற்றி.

சமுதாயத்தில் யாராலும் சாதிக்க முடியாததை சாதித்துக்காட்டி வெற்றிச் சிகரம் ஏறி நிற்பதே புரட்சி. இதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், காணாமல் போன மின்சாரத்தைக் கண்டுபிடித்து, தடையில்லா மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இல்லந்தோறும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்கப்படும் என்று உத்தரவிட்ட புரட்சித் தாய், நம் அம்மா அவர்கள். நெசவாளர்களுக்கு 200 யூனிட் மின்சாரம், விசைத்தறியாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்கி புரட்சி படைத்தவர், நம்முடைய புரட்சித் தாய் அம்மா அவர்கள்.

*பெயரில் மட்டும் தங்கம் என்று அழைக்கப்பட்ட ஏழைப் பெண்களுக்கு, வாழ்நாள் முழுவதும் கழுத்திலும், காதிலும்கூட குண்டுமணி தங்கத்தைக் காணாத ஏழைப் பெண்களுக்குத் தாயாக, ஒட்டுமொத்தமாக நான் இருக்கிறேன் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) திருமாங்கல்யத்திற்கு ஒரு பவுன் தங்கம் தந்த தங்கத்தாரகை அம்மா என்று அழைக்கின்றோம். இதுதான் புரட்சி.*

*ரம்ஜான் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு 4,600 மெட்ரிக் டன் அரிசி வழங்க உத்தரவிட்ட அன்னை தெரசா நம் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இஸ்லாமிய நாடான பாகிஸ்தான் தொலைக்காட்சி வெகுவாகப் பாராட்டியுள்ளது.*

*பத்து இலட்சம் ஏக்கர் தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற கொப்பரைக் கொள்முதலுக்கு உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் வாழ்க்கையிலும் பசுமையை உண்டாக்கி, தானும் ஒரு விவசாயி என்று தன்னைப் பெருமையுடன் குறிப்பிடும் பசுமைத் தாய் அம்மா அவர்கள்.*

*முற்பகல் 10–50*

*இறைவா, இறுதியாக உன்னிடம் ஒரு வரம் கேட்கிறேன். என் வாழ்நாளில் கடைசி நொடிப் பொழுதும் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள் இடும் கட்டளையை நிறைவேற்றும் தொண்டனாகவும், எனது உதடுகளுக்கும், நாவிற்கும் அசையும் சக்தி உள்ளவரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்க, அம்மா வாழ்க என்கிற திருவாசகத்தை உச்சரிப்பதாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க வேண்டும். என் கால்கள் ஓடும் சக்தி உள்ளவரை அம்மா அவர்கள் செல்லும் திசைகளில் நான் ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். உலகெலாம் அம்மா அவர்களின் புகழ் பரவ வேண்டும் என்று இறைவனை வேண்டி, என் தாயின் பொற்பாத மலர்களில் எனது சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும், என்னை மூன்றாம் முறையாகப் பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கிய அம்மாவின் வேண்டுகோளை ஏற்று, எளியவனான என்னை, எந்தப் பின்புலமும் இல்லாத என்னை, மூன்றாவது முறையாக, பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக, அம்மாவின் வேண்டுகோளை ஏற்று உருவாக்கிய*

பொள்ளாச்சி தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை கழகத்தின் கடைசித் தொண்டனாகிய நான் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாயே! உங்கள் இலட்சியம் உயர்வானது, தாயே உங்கள் பார்வை தெளிவானது, தாயே உங்கள் வெற்றி முடிவானது, நேற்றும் நமதே, இன்றும் நமதே, நாளையும் நமதே, (மேசையைத் தட்டும் ஒலி) என்றும் நமதே என்று கூறி, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று வாழும் தாயே, உங்களால் நான், உங்களுக்காகவே நான், உங்களுக்காகவே என்றும் நானும், எனது குடும்பமும் என்றென்றும் நன்றியுடன் இருப்போம் என்று கூறி, மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் நன்றி கூறி, அன்புத் தாயின் பாத மலர்களில் என் நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்மை வென்றது; தருமம் ஜெயித்தது; (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மை நிலைத்தது; மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலே மீண்டும் ஆட்சி அமைந்தது; (மேசையைத் தட்டும் ஒலி) மக்களால் நான், மக்களுக்காகவே நான் என தவ வாழ்வு வாழும் கருணைத் தாயின் தாரக மந்திரம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் நெஞ்சங்களிலே நிறைந்து வெற்றியைத் தந்தது. இன்றைக்குப் பேரவைத் தலைவராக இந்த இருக்கையிலே அமரவைக்கப்பட்டுள்ளேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு செய்துள்ள எண்ணற்ற உதவிகளை எண்ணிப் பார்க்கிறேன். இரண்டு முறை விபத்திலே பாதிக்கப்பட்டு, நான் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவ உதவி செய்து, 'உற்ற துயர் அத்தனையும் காற்றாய்ப் பறந்து போகும்; கவலைப்படாதீர்கள்; நான் காப்பேன்' என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்லி எனக்கும், என்னுடைய குடும்பத்திற்கும் ஆதரவு அளித்தது குறித்து, ஏற்கெனவே நான் இந்த அவையிலே பேசியதை இந்தத் தருணத்திலே நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன். இந்த ஏழைத் தொண்டனுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த உதவிகளால், இன்றைக்கு மறு ஜென்மம் பெற்று உயிர் வாழ்கிறேன். உங்களோடு சுவாசிக்கிறேன். பொது வாழ்விலே, எனக்குக் கிடைத்த அனைத்து உயர் பதவிகளும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

*அவர்களாலே அளிக்கப்பட்டவை என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். என்னுடைய பொது வாழ்வில் கழகத்தில் பல உயர் பொறுப்புகள், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும், பேரவைத் தலைவராகவும் பணியாற்ற வாய்ப்பளித்ததை நன்றியுடன் நினைவுகூர்கிறேன். அவினாசி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச்செய்து, இந்தப் பேரவையில் ஆறாவது முறையாகப் பணியாற்ற வாய்ப்பளித்த, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆசி பெற்ற என்னைத் தேர்ந்தெடுத்த அவினாசி தொகுதி மக்களுக்கும், என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இன்றைக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து வந்திருக்கிற எனக்கு, இரண்டாவது முறையாக பேரவைத் தலைவராகப் பணியாற்ற வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.*

*தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவருக்கு, மீண்டும் மீண்டும் இப்படிப்பட்ட அரிய வாய்ப்பினை உலகத்திலே எந்தத் தலைவராவது வழங்கியுள்ளார்களா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எண்ணிப் பார்த்தால், மாண்புமிகு அம்மா அவர்களைத் தவிர வேறு ஒருவருமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒளிவிளக்காகவும், கலங்கரை விளக்காகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் காண்கிறோம். சாதி மத பேதங்களை வேரறுத்து சவலைப் பிள்ளைகளையும் சத்துள்ள பிள்ளைகளாக மாற்றும் தாயாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் என்றென்றும் விசுவாசிகளாகத் திகழ்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10—55*

*சட்டமன்றப் பேரவைத் தலைவராக ஒருமனதாக என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் ஜனநாயக முறைப்படி இந்த அவை நடக்க வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டவர் என்பதற்கு நிறைய உதாரணங்களைச் சொல்லலாம். கடந்த 14–வது சட்டமன்றப் பேரவையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் உரையாற்ற அதிக வாய்ப்புகள் வழங்கவும், கூடுதலாக நேரம் ஒதுக்கவும் பல முறை கேட்டுக்கொண்டுள்ளது என சொல்லிக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்வதற்குப் போதிய வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவை இயற்றி, எனக்கு அளித்துள்ள சட்டமன்ற விதிகளைப் பின்பற்றி, மரபுகளிலிருந்து விலகாமல், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு உள்ள சிறப்பை நிச்சயம் காப்பேன் என்ற உறுதியை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள என்னை வாழ்த்திப் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசியது, என்னுடைய வாழ்நாளில் நான் பெற்ற பெரும் வரமாகவே கருதுகிறேன். இனி, என் வாழ்நாளில் எவ்வளவு பெரிய வளம் கிடைத்தாலும், இந்த அளவுக்கு அவை எனக்கு மகிழ்ச்சியைத் தராது, இன்பத்தைத் தராது. மனதாரச் சொல்கிறேன், இதற்கு ஈடு இணை எதுவும் கிடையாது. என் வாழ்வில் நான் பெற்ற பேரின்பம், பெரிய பாக்கியம், மாண்புமிகு அம்மா அவர்கள் என்னைப் பாராட்டியது ஒன்றுதான். பாராட்டிப் பேசி, இரண்டாவது முறையும் பேரவைத் தலைவராகப் பணியாற்ற வாய்ப்பினை வழங்கியுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை. நா தடுமாறுகிறது! வரம் தந்த கடவுள் முன்னால் பக்தன் நிற்கையிலே, மனம் நெகிழ்ந்து அவன்

*பேசும் வார்த்தைகள் ஏதும் வெளியில் கேட்காமல் காற்றாகிப் போகும். இவ்வாறு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னாலே இந்த எளிய தொண்டன் நிற்கிறேன்; என் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லத் துடிக்கிறேன்; வார்த்தைகளை வரவழைக்க முயற்சிக்கிறேன், முடியவில்லை; வார்த்தைகள் வெளியே வராமல் காற்றாக வருகின்றன; நன்றி சொல்ல வார்த்தைகள் தெரியாமல் திக்குமுக்காடி நிற்கிறேன்! ஒன்றே ஒன்று, நெஞ்சாரத் துதிக்கிறேன். இறைவா, "தமிழகத்தை உயர்த்தியே தீருவேன்" என சபதம் பூண்டு, அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்துச் செய்கிற செயல்கள் யாவிலும் வெற்றிகள் குவித்திட அருள் புரிந்திடுக! (மேசையைத் தட்டும் ஒலி) "என் வாழ்வு என் மக்களுக்கு" என வாழும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு அனைத்து நலன்களையும் அளித்து, பல்லாண்டு, பல்லாண்டு வாழ்ந்திட அருள் புரிந்திடுக (மேசையைத் தட்டும் ஒலி) என நெஞ்சார இறைவனை வேண்டி என்னுடைய நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிந்து சமர்ப்பிக்கிறேன். இந்தப் பெரும் வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை என் சார்பாகவும், என்னுடைய குடும்பத்தார் சார்பாகவும் மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *16–6–2016* (வியாழக்கிழமை) காலை *11–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை முற்பகல் 10–58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*****

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**